**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2024 ம் வருடம் பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் திங்கள்கிழமை</u>
**<u>இ.ம.எண்.01/2023 இன் அ.வ.எண்.123/2018</u>**

1) ஆறுச்சாமி
2) சுப்பிரமணியம்
3) சாந்தாமணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) ரத்தினம்
2) சதீஷ்குமார்
3) ஆனந்தராஜ்
4) நடராஜ் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 05.02.2024 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.மதிசேகர் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணத்தை அசல் வழக்கில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர் தரப்பு ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார். அசல் வழக்கானது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்யும்போது காவல்துறையினரிடமிருந்து பெற்ற CSR நகல்கள் மற்ற ஆவணங்களுடன் கலந்துவிட்டது. அதனால் மேற்படி CSR நகல்களை வழக்கில் உரிய நேரத்தில் தாக்கல் செய்யஇயலவில்லை. தற்போதுதான் மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றது. எனவே, காலதாமதமாக மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில், அ.வ.எண்.118/2018 வழக்கில் இடைக்கால உத்தரவு பெற்றுள்ளதை மறைத்துள்ளார். மேலும், மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யான புகாரை அளித்துள்ளார். மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உருவாகப்பட்டது. எதிர்மனுதாரர் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்வதை பொருத்து தனது ஆட்சேபணையை தெரிவிக்கிறார். எனவே, மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தை மனுதாரர்/வாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தாக்கல்

செய்வதாக கூறும் ஆவணம் வழக்கிற்காக உருவாகப்பட்டது என்றும், எனவே மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

7) நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவரின் முதல் விசாரணைக்காக வழக்கு பட்டியலிடப்பட்டிருந்த போது, மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1ம் மனுதாரர் நெகமம் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனுவிற்கான மனு ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யப்படுவதாலேயே அது நிரூபிக்கப்பட்டுவிட்டதாக கருத இயலாது.

8) எனவே, இரு தரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலனை செய்ததில், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுவதினால் எதிர்மனுதாரர்களுக்கு பெருத்த இழப்பொன்றும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அவ்வாறு ஆவணத்தின் தொடர்புடைமை மற்றும் செல்லுபடி தன்மைக்கு உட்பட்டு (Subject to Proof and relevancy of document) அவற்றை தாக்கல் செய்ய அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதி, அதன்படியே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகின்றது.

முடிவில், மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் தொடர்புடைமை மற்றும் செல்லுபடி தன்மைக்கு உட்பட்டு (Subject to Proof and relevancy of document) இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (26.02.2024) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

..... இல்லை .....

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல்ஆணையுரை**
இ.ம.எண்.01/2023 இன் அ.வ.எண்.123/2018
நாள் : 26.02.2024
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---